## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்

**அசல் வழக்கு எண்.57/2021**

பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி வெள்ளைச்சாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு. வீரமணிகண்டன், இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

நாள் :07.03.2026

பி.வா.சா.: DW1–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளைச்சாமி | வயது | : | 49 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | இலுப்பூர் |
| கிராமம் | : | மாராயப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

முதல்விசாரணை

நான் இந்த வழக்கில் 4– ம் பிரதிவாதி ஆவேன். நான் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எங்களது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 01.03.2012 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் கணினி சான்றிட்ட நகல் ( **இந்த ஆணவம் வாதி பெயரில் ஏற்பட்ட ஆவணம் என்று வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. இந்த ஆட்சேபனையுடன் இந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. தாவா சொத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு கட்டிய மின் கட்டண கணினி ரசீது (4 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.2 ஆகவும்,**

3. தாவா சொத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு பஞ்சாயத்து அலுவலகத்தில் வழங்கப்பட்ட வரி விதிப்பு ரசீது **பி.வா.சா.ஆ.3 ஆகவும்,**

4. தாவா இடத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு நடந்த கும்பாபிஷேகத்திற்கான அச்சடிக்கப்பட்ட பத்திரிக்கை அழைப்பிதழ் அசல் **பி.வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**(கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )**